# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூன் 28, 2025

Weekly E-paper • June 28, 2025




## மதம் கொண்ட அரசியல்...!

சுப. வீரபாண்டியன்

## பாஜக - அதிமுக கூட்டணியின் தோல்வியை அறிவித்த முருகன் மாநாடு!

காசு. நாகராசன்

## காசிக்குப் போகும் பாஜக

தலையங்கம்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூன் 28, 2025 Weekly E-paper ● June 28, 2025

# மதம் கொண்ட அரசியல்...!

சுப. வீரபாண்டியன்



கடவுள், மத நம்பிக்கை உடையவர்களே இன்றும் தமிழ்நாட்டில் மிக மிகப் பெரும்பான்மையினர் என்பதுதான் உண்மை. தமிழ்நாட்டில் மட்டுமில்லை, உலகம் முழுவதும் பகுத்தறிவாளர்களின் எண்ணிக்கை குறைவுதான். எல்லா காலங்களிலும், எல்லா நாடுகளிலும் இந்த நிலைதான் இருந்திருக்கிறது, இருக்கும்! இது ஓர் இயற்கையான நிலை. இதற்காக நாம் வெட்கப்படத் தேவையில்லை!

ஆனால் அந்தக் கடவுள், மத நம்பிக்கைகளை வைத்துக் கொண்டு அரசியலில் அதிகாரம் செலுத்த முடியும் என்பதை இந்தியாவின் வட மாநிலங்கள் சிலவற்றில் நம்மால் பார்க்க முடிகிறது! தமிழ்நாட்டில் இன்று வரையில் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை!

எப்படியாவது மத நம்பிக்கையை மூலதனமாக வைத்து அரசியலில் ஆட்சியைப் பிடித்து விட வேண்டும் என்னும் எண்ணத்தின் அடிப்படையில் தான், அண்மையில் மதுரையில் முருக பக்தர்களின் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது !



அந்த மாநாட்டில் பெருங்கூட்டம் கூடியது என்பது உண்மைதான் என்றாலும், இறுதி விளைவு என்னவோ, அவர்கள் நோக்கத்திற்கே எதிராக முடிந்து விட்டது. அதர்மத்தின் அடையாளங்களாகப் பெரியார், அண்ணா, கலைஞர் படத்தை அவர்கள் மேடையில் காட்டிய போது, தங்கள் கூட்டணிக்குள்ளேயே ஒரு சலசலப்பை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களே, வேறு வழியின்றி, அதற்கு மறுப்பு அறிக்கை கொடுக்க நேர்ந்தது. அண்ணாவைப் பற்றித் தரக்குறைவாக பேசும் போது, அதிமுகவினர் அங்கே வெட்கமற்று அமர்ந்திருந்தார்கள் என்னும் விமர்சனமும் வெளிவந்தது! நயினார் நாகேந்திரன் உள்பட, பாஜகவின் மாநிலப் பொறுப்பாளர்கள் பலரும், அந்தக் காணொளியை நாங்கள் பார்க்கவே இல்லை என்று நம்ப முடியாத பொய்யைச் சொல்லி நழுவினர்.

இன்னொரு பக்கம், மதுரை ஆதீனம் தன்னைக் கொல்லச் சதி நடக்கிறது என்று ஓர் அறிக்கை விட்டதும், அது இப்போது முழுப் பொய் என்று தெரிந்ததோடு, அவருடைய கார்தான் தவறான பாதையில் வந்திருக்கிறது என்பதும் புகைப்படக் கருவிகளின் பதிவின் மூலம் வெளிப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில், அவர்மீது நான்கு பிரிவுகளின் கீழ், வழக்கும் தொடரப்பட்டுள்ளது !



இவை போதாதென்று, திருவில்லிபுத்தூர் பெரிய மாரியம்மன் கோயில் குடமுழுக்கையொட்டி, கன்னியாகுமரியில் இருந்து அங்கு வந்திருந்த அர்ச்சகர்கள் சிலர், குடித்துவிட்டுக் குத்தாட்டம் போட்ட காணொளி வெளியாகி, ஊரே சிரித்துக் கொண்டிருக்கிறது! ஒரு பெண்ணின் முகத்தில் விபூதி அடித்து, அந்தப் பெண் மூச்சு திணறுவதைப் பார்த்து அவர்கள் சிரித்துக் கும்மாளமிட்டிருக்கிறார்கள். இதுதான் அர்ச்சகர்கள் செய்யக்கூடிய காரியமா என்று எண்ணி, பக்தர்களே இப்போது வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

பாஜகவினர் இப்போதாவது, ஒன்றை நெஞ்சில் நிறுத்திக் கொள்வது நல்லது. மதங்கொண்ட அரசியல் ஒரு நாளும் தமிழ்நாட்டில் எடுபடாது!

# பாஜக – அதிமுக கூட்டணியின் தோல்வியை அறிவித்த முருகன் மாநாடு!

**காசு. நாகராசன்**

மதுரையில் கடந்த 22 ஆம் தேதி முருக பக்தர்கள் மாநாடு என்ற பெயரில், பாஜகவின் கையாளான இந்து முன்னணி பெயரில்


ஒரு மாநாட்டை பாஜகவே நடத்தியிருக்கிறது.


திராவிடத்தை வீழ்த்த...

மோடியை வாழ்த்த....

இந்துக்களின் வாக்கைப் பெற....

முருக வியூகம் அமைத்து மாநாடு கூட்டியிருக்கிறது பாஜக. இதுவே பாஜகவின் முதல்கட்ட அரசியல் தோல்வி தான். எந்தக் காலத்திலும் அந்தக் கட்சியால் தமிழ்நாட்டில் ஒற்றை இலக்க வாக்கு விகிதத்தைத் தாண்டவே முடியாது என்பதற்கு நடந்து முடிந்த மதுரை மாநாடே சாட்சி. அவர்கள் மொழியில் சொல்வதானால் முருகனே சாட்சி.





பா.ஜ.க தனது கொள்கையையோ அல்லது தனது பெயரையோ வெளிப்படையாக அறிவிப்பதற்கே துணிவில்லாமல், அவர்கள் மொழியில் சொன்னால் சாணக்கியத்தனத்தோடு முருக பக்தர்களின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு மாநாடு கூட்டுகிற நிலைமையில் தான் அது இருக்கிறது. ஆர்.எஸ்.எஸ் தொடங்கிய நூறாவது ஆண்டிலும் தமிழ்நாட்டில் அந்த இயக்கத்தின் நிலைமை இப்படி இருக்கிறது என்கிறபோது அவர்கள் ஆட்சியைப் பிடிப்பார்களாம்...? இந்த ஓட்டைத் தோணியில் வலுக்கட்டாயமாக அ.தி.மு.க.வையும் ஏற்றிவிட்டு ' ஞே ' என்று முழித்துக் கொண்டு நிற்கிறது எடப்பாடி பழனிசாமி வகையறா.

1925 ஆம் ஆண்டுதான் இந்திய அரசியல் வரலாற்றின் பல்வேறு திருப்புமுனைகள் நடைபெற்ற ஆண்டு ஆகும். 1924 ஆம் ஆண்டில் சிந்துவெளி நாகரிகம் குறித்த அகழாய்வு முடிவுகளை சர் ஜான் மார்ஷல் தலைமையிலான குழு வெளியிட்டதைத் தொடர்ந்து, ஆரியர்கள் வந்தேறிகள் என்கிற உண்மை வெளிப்பட்டு, " ஓ... நீயும் வந்தேறியா? நாங்கள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வந்தவர்கள். நீ ரெண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்தவன் இவ்வளவுதான் வித்தியாசம்!? "

என்று ஆங்கிலேயர்கள் பார்ப்பனர்களைப் பார்த்துக் கேலி பேசியபோதுதான் பார்ப்பனர்களுக்கு ஆபத்து புரிந்தது. வந்தேறி என்கிற தங்கள் மீதான அடையாளத்தை ஆதாரத்தை மடைமாற்ற, இந்து – முசுலீம் பிரிவினைவாத அரசியலைச் செயல்படுத்தத் திட்டமிட்டனர் வடநாட்டு சித்பவன் பார்ப்பனர்கள். அந்தத் திட்டம் தான் 1925 அக்டோபரில் உருவாக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். என்கிற ஒரு மத பயங்கரவாத அமைப்பு.

அதே 1925 ஆம் ஆண்டில் தான், வர்ணாசிரம – சனாதன ஜாதீய அடுக்கு முறையால் அடிமைப் படுத்தப் பட்டிருந்த பார்ப்பனர் அல்லாதார் சமுதாய மக்களின் உரிமைகளுக்கான சமூகநீதிக் குரலை ஓங்கி முழங்கியபடி, பார்ப்பனர்கள் ராஜ்ஜியம் நடத்திக் கொண்டிருந்த அன்றைய காங்கிரஸ் கட்சியில் இருந்து தந்தை பெரியார் வெளியேறினார். சுயமரியாதை இயக்கம் தோன்றியது.

அதாவது, 2025 ஆம் ஆண்டு என்பது திராவிடமாடலின் தோற்றுவாயான சுயமரியாதை இயக்கத்திற்கும் நூற்றாண்டு.

ஆரியமாடலின் வழிகாட்டியான சங்பரிவார் கூட்டத்திற்கும் நூற்றாண்டு.

சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா கடந்த ஓராண்டு காலமாக தமிழ்நாடு முழுவதும் திராவிட இயக்கத் தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு திராவிட இயக்கங்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு மாபெரும் மக்கள் விழாவாக, மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் என இன்னமும் கொண்டாடப்பட்டு வருகிறது.

1925 ஆம் ஆண்டில் எந்தெந்த முழக்கங்களை சுயமரியாதை இயக்கம் முன்வைத்ததோ அவற்றை எல்லாம் உரிய சட்ட வாய்ப்புகளை, அதிகார வாய்ப்புகளைப் பயன்படுத்தி திமுகவும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும் செம்மொழிக் .காவலர் இனஉரிமைத் தலைவர் கலைஞர் அவர்களும் கடந்த 50 ஆண்டுகளுக்கும் முன்பே செயல்படுத்தத் தொடங்கி, அது பல்வேறு வடிவங்களில் வளர்ந்து இன்றைக்கு

தொடர்ச்சி அடுத்த பக்கம்...




திருவள்ளூர் மாவட்டம், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக 21-06-2025 அன்று முத்தமிழ் மன்றம், ஔவையார் அரங்கில் நடத்தப்பட்டத் 'திராவிட இயக்க நூற்றாண்டு விழா' வில், ஆவடி மாவட்டச் செயலாளர் என்.கே.மூர்த்தி தலைமை தாங்கினார். 'காவிகளின் பல முகங்களும், முகமூடிகளும்' என்ற உரையாடல் நிகழ்ச்சியை ஊடகவியலாளர்கள் புதுவை தீனா, அதர்மம் மனோஜ், யூ டு புரூட்டஸ் மைனர், இந்திர குமார் தேரடி ஆகியோர் நிகழ்த்தினர். பேரவைத் தலைவரின் 'கருப்பும் காவியும்' நூலை வெளியிட்டுப் பேரவைத் துணைப் பொதுச்செயலாளர் இரா.உமா, திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் பிரின்ஸ் என்னெரெசு பெரியார் இருவரும் சிறப்புரை நிகழ்த்தினார்கள். கூட்டத்தைத் தோழர்கள் மூர்த்தி, மோகன்ராம், அம்பத்தூர் ராஜு ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

---

## முன்பக்கத் தொடர்ச்சி...

தமிழ்நாட்டை, இந்தியாவின் முன்னேறிய மாநிலப் பட்டியலில் முதல் வரிசையில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

2021 ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆட்சியமைந்த நூற்றாண்டில் மீண்டும் திமுகழகத்தை அரியணையில் அமர்த்தினார்கள் தமிழ்நாட்டு மக்கள். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று இன்னும் ஒருபடி மேலே போய்,

பார்ப்பனர் அல்லாத சமுதாய மக்களின் நலன் காக்கும் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை, நீதிக்கட்சியின் திட்டங்களை எல்லாம் நவீன வடிவில் செயல்படுத்தி திராவிடமாடல் ஆட்சியை முன்னெடுத்து நடத்தி வருகிறார்.

திராவிட இயக்கங்கள் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையை வெளிப்படையாக அறிவித்து, அதன் தேவையைச் சொல்லி, மக்களைத் திரட்டி, மாநாடுகள் கூட்டி, மீண்டும் அடுத்த நூற்றாண்டுக்கான தீர்மானங்களையும் இயற்றி தமது பயணத்தைத் தொடர்கிறது.

ஆனால், ஆரியம் என்ன செய்கிறது? 1971 ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டு மக்களால் வெளுத்து விரட்டப்பட்ட, ராம் ராம் முழக்கத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு, முப்பாட்டன் முருகன் என்கிற முழக்கத்தைக் கையிலெடுத்து அதையும் "பக்தர்கள்" முகமூடி போட்டு, மதுரைத் தெருக்களில் இழுத்து வந்திருக்கிறது பார்ப்பனக் கும்பல்.

ஆறுபடை முருகனையும் ஒரே இடத்தில் தரிசிக்கலாம்! பக்தி சுற்றுலா போகலாம்! மதுரைய சுற்றிப் பார்க்கலாம்! என்றெல்லாம் பல்வேறு வித்தைகள் காட்டி, தலைக்கு 500 , பயணச் செலவில்லை, உணவுச் செலவுமில்லை, ஞாயிற்றுக் கிழமை விடுமுறையை கொண்டாடலாம்!

என்றெல்லாம் ஆடி ஆஃபர்களை அறிவித்து மக்களை அழைத்து வந்து அதிலே இழுத்து வரப்பட்ட அ.தி.மு.க வினரையும் உட்கார வைத்து, நீதிமன்றத்தில் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை தாங்களே மதிக்காமல் தீர்மானங்களைப் போட்டு, இந்த வாரம் முழுவதும் நெட்டிசன்களுக்கு கண்டன்ட்டும் , பொதுமக்களுக்கு பேசி சிரித்து காறி உமிழ ஒரு வாய்ப்பும் வழங்கியிருக்கி றது மதுரை பாஜக மாநாடு.

திராவிட சமுதாய இன மக்கள் மானமும் அறிவும் உள்ள இனமாக வாழ வேண்டும் என்பதற்காகவே உழைக்கிறது திராவிடமாடல்!

பார்ப்பனர் அல்லாத பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பெரும்பாண்மைச் சமுதாய மக்களின் கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, வாழ்வுரிமைகளுக்காகவும், இன்றைக்கும் அதிகாரத்திலும், களத்திலும் நின்று பணியாற்றிக் கொண்டிருக்கிறது திராவிட இயக்கம்.

பெரும்பான்மை மக்களை கடவுளின் பேரால், மதத்தின் பேரால், சாஸ்த்ர - சம்பிரதாயங்களின் பேரால் அடக்கியாண்டு மூன்று விழுக்காடு பார்ப்பன நலனைப் பாதுகாக்கத் துடிக்கிறது ஆரியமாடல்.

எனவே, இன்னும் நூறாண்டுகள் ஆனாலும், தமிழ்நாட்டுத் தெருக்களில் ஆரியம் கேலிப் பொருள்தான். திராவிடம் தான் எங்கள் உரிமைக் குரல் என்பதை, உரத்துச் சொல்லியிருக்கிறது மதுரை முருகன் மாநாடு.

அதை 2026 இன்னும் வலிமையாக ஓங்கிச் சொல்லி நிரூபிக்கும். அதற்கான பணிகளை, தீர்மானங்களை, வேலைத் திட்டங்களை அறிவிக்க அதே மதுரையில் சூலை 27ஆம் தேதி கூடுகிறது 'திராவிட இயக்கத் தமிழர் பேரவை!' ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## காசிக்குப் போகும் பாஜக

பக்திவேடம் போட்டு வேலெடுத்து சுற்றித்திரிந்த காவிக் கூட்டத்தார், இப்போது முருக வேடமிட்டு முருகனைத் தூக்கத் தொடங்கி விட்டார்கள், தமிழ்நாட்டில்.

தமிழ்மீது எக்கச்சக்கமான அக்கரையினால் காசியில் தமிழ்ச் சங்கம் கூட்டி தமிழ் வளர்க்கிறார்களாம்.

எப்படி? வழக்கில் இல்லாத சமஸ்கிருதம் என்ற மொழியை வளர்க்க 2,532. 59 கோடி ரூபாவை ஒதுக்கி இருக்கும் ஒன்றிய அரசு, தமிழ் உள்பட ஐந்து தென்மாநில மொழிகளுக்கும் சேர்த்து வெறும் 147. 56 கோடியைத்தான் ஒதுக்கியிருக்கிறது.

இதைத்தான் நம்முடைய முதலமைச்சர் "போலிப் பாசம் தமிழுக்கு, பணமெல்லாம் சமஸ்கிருதத்திற்கு" என்று வெளிப்படையாகக் கூறியிருக்கிறார், காவிகளின் தமிழ்ப் பாசம் குறித்து.

தமிழர்களின் நாகரீகம், பண்பாடு மிக உயர்ந்தது என்று முன்பு தமிழ்நாட்டில் பேசியிருந்தார், பிரதமர். ஆனால் கீழடி நாகரீக ஆய்வறிக்கையை மட்டும் அவரின் அரசு ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

ஏனென்றால் கீழடி தமிழர் நாகரீகம், சிந்துவெளியை விடவும் காலத்தால் மிக முந்தையது.

காவிகள் இன்னமும் தேடிக்கொண்டு இருக்கும் 'இல்லாத' சரஸ்வதி நதிநாகரீகம் ஏதோ மண்ணுக்குள் ஒடிக்கொண்டிருப்பதாக ஒரு கேள்வி.

இந்தக் காவிக் கூட்டத்திற்கு நம்மூர் இலையும், சில தழைகளும் துணைபோகின்றன, கூட்டணி என்ற பெயரால்.

ஏன் இந்த சடுகுடு விளையாட்டு? எல்லாம் நெருங்கிக் கொண்டிருக்கும் தேர்தலுக்காகத் தான்!

கொள்கையைச் சொல்லி தமிழ்நாட்டு மக்களிடம் வாக்குவாங்க முடியாது பாஜகவால். இனி தமிழ்நாட்டில் வேலை இல்லை, காசிக்கே போகவேண்டும், பாஜக, என்பது அதற்குத் தெரியும். ஆகவே ராமஜென்மபூமி என்று அயோத்தியில் பாபர் மசூதியை இடித்தார்களே,

அதுபோல் குன்றம் காப்போம், சிக்கந்தர் மலை என்று இங்கும் கலவரம் உருவாக்கக் காவிகள் கனவு காண்கிறார்கள். இனி தமிழ்நாட்டில் வேலை இல்லை, காசிக்கே போகட்டும், பாஜக!

அவர்களின் கனவும், முயற்சியும் தமிழ்நாட்டில் பலிக்காது என்றாலும், நாம் திராவிட மாடல் ஆட்சி சிறப்பாக இருக்கிறது என்று ஏனோ தானோவாக இருந்து விடக்கூடாது.

தேர்தல் ஒன்றும் புதிதல்ல திமுகவினருக்கு. தேர்தல் களத்தில், முதல்வர் சொன்னதுபோல "களப்பணி ஆற்றுவோம், வெற்றி பெறுவோம்".

மீண்டும் முதலமைச்சர் நம் ஸ்டாலின் தான், 2026ஆம் ஆண்டும், தொடர்ந்தும்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



சேலம் மாவட்டம், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் 21-06-2025 அன்று, பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் எழுதிய "கருப்பும் காவியும்" என்ற நூலைக் கருப்பொருளாக எடுத்து ஒரு கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தோழர் சுந்தரவதனம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சிற்பி செல்வராஜ் சிறப்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் தோழர் வரதராஜன் தோழர்கள் திராவிட அரசு, புவனேஸ்வரி உள்ளிட்டத் தோழர்கள் இக்கலந்துரைடலில் கலந்து கொண்டனர்.